இயக்குநர் பாரதிராஜாவின் உடல் முழு அரசு மரியாதையுடன் அடக்கம்

அமைச்சர்கள், திரை பிரபலங்கள் அஞ்சலி

இயக்குநர் பாரதிராஜாவின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார். (வலது) இறுதிச் சடங்கில் துப்பாக்கிக் குண்டுகள் முழங்க மரியாதை செலுத்திய காவலர்கள்.

பெரியகுளம், ஜூன் 11: மறைந்த திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவின் உடல் தேனி மாவட்டம், பெரியகுளம் கெங்குவார்பட்டி அருகே கொடைக்கானல் சாலையில் உள்ள அவரது பண்ணை இல்லத்தில் முழு அரசு மரியாதையுடன் வியாழக்கிழமை அடக்கம் செய்யப்பட்டது.

திரைப்பட இயக்குநர் பாரதிராஜா உடல் நலக் குறைவு காரணமாக சென்னையில் புதன்கிழமை காலமானார். இதையடுத்து, அவரது உடல் சென்னை நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அவரது உடலுக்கு முதல்வர் ஜோசப் விஜய், திரைத் துறையினர், அரசியல் கட்சியினர் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து, அவரது உடல் தேனி மாவட்டம், பெரியகுளம் கெங்குவார்பட்டி அருகே கொடைக்கானல் சாலையில் உள்ள பண்ணை இல்லத்தில் அடக்கம் செய்யப்படும் என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அதன்படி பாரதிராஜாவின் உடல் சென்னையில் இருந்து அவசர ஊர்தி மூலம் பண்ணை இல்லத்துக்கு வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கொண்டு வரப்பட்டது.

அங்கு அவரது உடலுக்கு திரை பிரபலங்கள், அரசியல் கட்சியினர், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். பின்னர், மாலை 4 மணிக்கு மேல் இறுதிச் சடங்கு நடைபெற்றது. இறுதிச் சடங்கை பாரதிராஜாவின் மகள் ஜனனி, மனைவி சந்திரலீலா செய்தனர். இதன்பிறகு, காவல் துறை சார்பில் 72 குண்டுகள் முழங்க அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கில் எரிசக்தி, சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பெ. சண்முகம், மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன், அதிமுக முன்னாள் அமைச்சர் உதயகுமார், முன்னாள் எம்எல்ஏ மகேந்திரன், தேனி மாவட்ட ஆட்சியர் இரா. வைத்திநாதன், டிஐஜி சசிமோகன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் சினேஹாப்ரியா (தேனி), பிரதீப் (திண்டுக்கல்), கவிஞர்கள் வைரமுத்து, சினேகன், இயக்குநர்கள் கே.பாக்கியராஜ், ஆர்.கே. செல்வமணி, ராம், பேரரசு, ரத்தினகுமார், பொன்ராம், வெற்றிமாறன், சமுத்திரக்கனி, நடிகைகள் ராதிகா, சுகாஷினி, நிரோஷா, நடிகர்கள் வடிவேலு, நிழல்கள் ரவி, இளவரசு, கருணாஸ், விக்னேஷ், லட்சுமண், ஜோ மல்லூரி, ஒளிப்பதிவாளர் ஈஸ்வர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பாரதிராஜாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கரூர் சம்பவம்: விசாரணையை மீண்டும் தொடங்கியது சிபிஐ

கரூர், ஜூன் 11: கரூர் துயர சம்பவம் தொடர்பாக மீண்டும் விசாரணையைத் தொடங்கிய சிபிஐ அதிகாரிகள் வியாழக்கிழமை காலை வாங்கல் காவல் ஆய்வாளர் உள்பட 10 போலீஸாரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த 2025 செப்.27-இல் தவெக தலைவரும், தமிழக முதல்வருமான ஜோசப் விஜய்யின் தேர்தல் பரப்புரையின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதுதொடர்பாக உச்சநீதிமன்ற உத்தரவின்படி சிபிஐ அதிகாரிகள் வழக்குப் பதிந்து பல தரப்பினரிடமும் விசாரணை மேற்கொண்டனர்.

இந்த நிலையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதால், சிபிஐ அதிகாரிகள் 2 மாதங்களுக்கும் மேலாக தங்களது விசாரணையை நிறுத்தி இருந்தனர்.

இந்த நிலையில், ஏற்கெனவே சிபிஐ தரப்பில் விசாரணைக்காக அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்த கரூர் வெங்கமேடு காவல் ஆய்வாளரும், வாங்கல் (பொ) காவல் ஆய்வாளருமான சையத் அலி, கரூர் நகரக் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ரமேஷ் மற்றும் 8 போலீஸார் வியாழக்கிழமை காலை கரூரில் பொதுப்பணித் துறை அலுவலகத்துக்குச் சொந்தமான பயணியர் மாளிகையில் தங்கியிருக்கும் இரு சிபிஐ அதிகாரிகள் முன் விசாரணைக்கு வியாழக்கிழமை ஆஜராகினர். காலை 10 மணிக்கு தொடங்கிய விசாரணை சுமார் 3 மணி நேரம் நீடித்தது.

தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக உருவாக்குவோம்

சென்னை, ஜூன் 11: தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கு துணையாக இருந்து குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக தமிழ் நாட்டை உருவாக்குவோம் என்று முதல்வர் ச.ஜோசப் விஜய் தெரிவித்தார்.

குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, அவர் வியாழக்கிழமை அறிக்கை:

துள்ளித் திரிந்து விளையாடி, பள்ளிக்குச் சென்று கல்வி பயிலும் இனிய பருவத்தில், பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளால் வேலைக்குச் செல்கின்ற குழந்தைகளை, அந்தக் கொடுமையிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவத்தையும், முறையான கல்வியையும் வழங்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

ஒவ்வொரு குழந்தைக்கும், சுதந்திரமாக வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் கல்வி உரிமை போன்றவை அவசியமாகும். இவற்றை வழங்க மறுப்பது இயற்கை நீதிக்கும், சமூக நீதிக்கும் எதிரானதாகும்.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குழந்தைத் தொழிலாளர்கள் உழைப்பின் மூலம் பெறப்படும் வருமானம் வீட்டுக்கும், நாட்டுக்கும் சிறுமை என்பதை சமூகமும், பெற்றோர்களும் உணர்ந்து, குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்க தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் முன்னெடுப்புகளுக்குத் துணை நின்று, குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடுவோம். குழந்தைத் தொழிலாளர் முறையைத் தகர்ப்போம் என்று தெரிவித்துள்ளார்.

திமுக கூட்டணியில் நீடிப்பதா?: ஜூன் 27-இல் மதிமுக முடிவு

திருச்சி, ஜூன் 11: திமுக கூட்டணியில் நீடிப்பதா அல்லது வேண்டாமா என்பது குறித்து வரும் 27-ஆம் தேதி நடைபெறும் கட்சியின் பொதுக் குழுவில் முடிவு செய்யப்படும் என மதிமுக முதன்மைச் செயலரும், திருச்சி மக்களவை உறுப்பினருமான துரை வைகோ தெரிவித்தார்.

இதுதொடர்பாக, திருச்சியில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை அவர் மேலும் கூறியதாவது: கூட்டணியில் நீடிப்பது அல்லது வெளியேறுவது என்பது அந்தந்தக் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் எண்ணங்களைப்பொருத்தது. மதிமுகவைபொருத்தவரை, வரும் 27-ஆம் தேதி நடைபெறவுள்ள பொதுக்குழுக் கூட்டத்தில் மேக்கேதாட்டு அணை விவகாரம், மும்மொழிக் கொள்கை உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பிரச்னைகளுடன் கூட்டணி குறித்தும் விவாதித்து இறுதி நிலைப்பாடு அறிவிக்கப்படும்.

நீதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதல்வர் கலந்து கொண்டது ஒரு ஆரோக்கியமான விஷயம். தமிழகத்துக்குத் தேவையான திட்டங்களையும், நிதியையும் பெறுவதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

தமிழகத்துக்கு ஒட்டுமொத்தமாக சுமார் ரூ. 10 லட்சம் கோடி கடன் சுமை இருக்கும் சூழலில், மத்திய அரசு அறிவிக்கும் திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாக மட்டுமே இல்லாமல், தமிழகத்துக்கு வரவேண்டிய நிதியை முறையாகக் கொடுத்தால் மட்டுமே மாநிலத்தின் நிதி நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்றார் துரைவைகோ.

கார் மோதி பள்ளி மாணவர்கள் 3 பேர் உயிரிழப்பு

மன்னார்குடி/சென்னை, ஜூன் 11: மன்னார்குடி அருகே கார் மோதியதில் அரசுப் பள்ளி மாணவர்கள் 3 பேர் வியாழக்கிழமை உயிரிழந்தனர்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி-தஞ்சை பிரதான சாலையில் காரக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி 6-ஆம் வகுப்பு மாணவர்களான அதே பகுதியைச் சேர்ந்த முருகேசன் மகன் யோகேஸ்வரன் (12), முகேஷ் மகன் ரஷித் (12), 7-ஆம் வகுப்பு மாணவர் ரமேஷ் மகன் ராஜமுரளி (12) ஆகிய மூன்று பேரும், வியாழக்கிழமை மாலை பள்ளி அருகே சாலையோரம் நடந்து சென்றனர். அப்போது, அந்த வழியே கூத்தாநல்லூர் லட்சுமாங்குடியை சேர்ந்த உலகநாதன் (51) என்பவர் அதிவேகமாக ஓட்டி வந்த கார் 3 மாணவர்கள் மீதும் மோதியது. இதில், பலத்தகாயமடைந்தராஜமுரளி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்ற இருவரும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர். வடுவூர் போலீஸார் வழக்குப் பதிந்து, மதுபோதையில் இருந்த கார் ஓட்டுநர் உலகநாதனை கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சாலை மறியல்: விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுநர் உலகநாதன் போலீஸிடமிருந்து தப்பியோடி விட்டதாக தகவல் பரவியதால், காரக்கோட்டை பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் அந்தப் பகுதியில் வியாழக்கிழமை மாலை சாலை மறியலில் ஈடுபட்டனர். மன்னார்குடி டிஎஸ்பி மணிவண்ணன், வடுவூர் காவல் ஆய்வாளர் கவிதா ஆகியோர் தகவல் தவறானது, உலகநாதனை வடுவூர் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து வருவதை உறுதிப்படுத்தினர்.

முதல்வர் நிவாரண நிதி: மாணவர்கள் யோகேஸ்வரன் (12), ரஷித், ராஜமுரளி ஆகியோர் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன். லேசான காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் மாணவர் ஹிருத்திக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளேன். உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 3 லட்சமும், லேசான காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் மாணவருக்கு ரூ.50 ஆயிரமும் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன் என்று முதல்வர் ச.ஜோசப் விஜய் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள், சக மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அதிமுக-அமமுக இணைப்பு இல்லை: டிடிவி.தினகரன்

சென்னை, ஜூன் 11: அதிமுகவுடன் அமமுகவை இணைக்கும் சூழல் தற்போதைக்கு இல்லை என்று அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக சென்னை அடையாறில் உள்ள அமமுக தலைமை அலுவலகத்தில் அவர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது: 2026 தேர்தலில் கூட்டணிக்கு மத்திய அமைச்சர் அமித் ஷா எங்களை அழைத்தார். அதன் அடிப்படையில் அதிமுக ஆட்சி வர வேண்டும் என்று முயற்சி செய்தோம். அமமுகவை அதிமுகவுடன் இணைப்பதற்கான சூழல் தற்போது இல்லை. இந்தக் கடினமான காலத்தில் அதிமுகவுக்கு ஆதரவாக இருக்கிறோம். தவெக, திராவிட கட்சிக்கு மாற்று என்று தெரிவித்துவிட்டு நாங்கள் சொல்வதைத்தான் செய்து வருகின்றனர். புதிய ஆட்சியாகத் தெரியவில்லை என்றார் அவர்.

CHANGE OF NAME

I, **ANEES FATHIMA,** born on **16.03.1987,** (Native District Tenkasi) Residing at No.22, Minor Muthalali Street, Panpozhi, Tenkasi Dt-627807, Shall henceforth be known as **ANEEZ FATIMA.**

ANEES FATHIMA
Tenkasi.
09.06.2026

NOTICE

I, **S THANKANADAR,** S/o.I/C Army No.**2605334H** RANK EX-HAV/H.Nb Sub Name: **T RAJENDRAN,** resident at Door No.9-16, Eliyanvilai, Thiruvithancode-P.O, Kalkulam Taluk, Kanniyakumari District, Tamil Nadu-629 804. As per my Son Record Office my name is **S THANKANADAR** and Date of Birth is **02.03.1950** hereby declared that shall hereafter be known as my name as **THANGANADAR SUBBRAMANIYAN.** Date of Birth is **19.12.1947.**
(THANGANADAR SUBBRAMANIYAN)
NEW NAME

HDB FINANCIAL SERVICES — HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிட்டெட்
பதிவு அலுவலகம்: ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவரங்புரா, அகமதாபாத் - 09.
கிளை அலுவலகம்: HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிடெட், ஆசீர் காம்பிளக்ஸ், 2ஆவது தளம், திருச்செந்தூர் சாலை, சமாதானபுரம், திருநெல்வேலி - 627002.

கோரிக்கை அறிவிப்பு SARFAESI சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழ்

கீழ்காணும் விண்ணப்பதாரர் மற்றும் கூட்டு விண்ணப்பதாரர்கள் ஆகிய உங்களுக்கு எமது நிறுவனத்தின் பெயருக்குச் சொத்தை ஈடுறுதியாக அசித்ததன் பேரில் கடன் வழங்கப்பட்டது. நிறுவனப் பதிவேடுகளின்படி, குறிப்பிட்ட கடனைத் திருப்பிச் செலுத்துவதில் பிழைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவ்விழைவுகளின் காரணமாக, குறிப்பிட்ட கடன் கணக்கானது நிறுவனத்தின் கணக்கும் பேரேடுகளில் செலுத்த வேண்டிய சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து, வழங்கப்பட்ட தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் பல முறை குறியீடுகள் காரணமாக இந்தக்கான ஒப்பந்த ரத்தாகி விட்டது என்பது உங்கள் அனைவருக்கும் கடன் வகை அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது என்பதும் இங்கே குறிப்பிடப்படுகிறது. துணிறும் நீங்கள் அனையரும் கடன் கணக்கை முடக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் வழங்கப்பட்ட தொகையைத் திருப்பிச் செலுத்தத் தொடர்ந்து தவறியுள்ளீர்கள். எனவே நிறுவனத் தொகையைத் திருப்பப் பெற, SARFAESI சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டது. விண்ணப்பதாரர்கள் மற்றும் கூட்டு விண்ணப்பதாரர்கள் ஆகியோருக்கு அறிவிப்பு சரிவு செய்யப்படாததால் குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13(2) அதனுடன் கடனீட்டுச் சொத்து அமைக்க விதிகள் 2002, விதி 3(1)-இன்படி அவர்களுக்கு மாற்றாக சேவை வழங்கும் பொருட்டு அறிவிப்பின் உள்ளடக்கம் இங்கே வெளியிடப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் / கூட்டு விண்ணப்பதாரர்கள் / ஜாமீன்தாரர், நிறுவனத் தொகையைக் கடனீட்டுச் சொத்துக்கள் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

(1) விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர்கள் பெயர்: 1) R P S எஞ்சினீர், 4/28, 4/32, பிரதான சாலை, குமரகிரி, புதுக்கோட்டை, TVL-628103. **2) பொன்செல்வன் R,** 4/642-39, அம்மன் கோவில் தெரு, குமரகிரி, புதுக்கோட்டை, தூத்துக்குடி, புதுக்கோட்டை TVL-628103. **3) சுபா P,** 4/642, அம்மன் கோவில் தெரு, குமரகிரி, புதுக்கோட்டை TVL-628103. **கடன் கணக்கு எண் 6177651, கோரிக்கை அறிவிப்பு நாள்: 27.05.2026,** செலுத்த வேண்டிய சொத்தாக அறிவிக்கப்பட்ட (NPA) **நாள்: 16.03.2026, மொத்த நிலுவை: ரூ.22,79,728 (ரூபாய் இருபத்தாயிரத்து இரண்டாயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு மட்டும்) - 27.05.2026** நாள்படி - இத்துடன் தொகை திரும்பப் பெறும்வரை நாள் வரையிலானதும் ஒப்பந்த விதிப்படியானதுமான எதிர்கால வட்டி மற்றும் இடைநிலுவை செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள் முதலானவை உட்பட.

கடனீட்டுச் சொத்து விவரங்கள்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அமைவிடம் - தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி, புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக வட்டார சட்ட எல்லைகள், குமரகிரி (எ) புதுக்கோட்டை ஊராட்சி, குமரகிரி (எ) புதுக்கோட்டை கிராமம். சர்வே எண் **299/13,** இதில் உள்ள பரப்பளவு 5 சென்ட் கொண்ட நிலம் மற்றும் சர்வே எண் **299/14,** பரப்பளவு 37 சென்ட் கொண்ட நிலம், மொத்தப் பரப்பளவு 42 சென்ட் கொண்ட நிலம், வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டது. இதன் மேற்கில் அடங்கிய 4,துவது மற்றும் 5,துவது இனத்தின் பரப்பளவு 5,005 சென்ட் கொண்ட வீட்டு மனை மற்றும் கதவு எண் 1/83-1 கொண்ட வீடு மற்றும் அனைத்து உபகரணங்கள் உட்பட. இந்த அட்டவணைச் சொத்து குறிப்பாக சர்வே எண் **299/14**-இல் அமைந்துள்ளது. **எல்லைகள் பின்வருமாறு: வடக்கு:** சர்வே எண் 299/14-இல் உள்ள P.கந்தசாமி அவர்களின் காலி நிலம். **தெற்கு:** மேற்கு பகுதியில் உள்ள அருள்மிகு சக்திகாளி அம்மன் கோவிலுக்குச் செல்லும் வடக்கு நெற்காக 10 அடி அகலமுள்ள கிழக்கு மேற்குப் பொது வழிப்பாதை, கிழக்கு மேற்காக 20 அடி அகலமுள்ள வடக்குத் தெற்கு ஊராட்சி சாலை, **கிழக்கு:** சர்வே எண் 299/14-இல் உள்ள P.கந்தசாமி மற்றும் பிறருடைய காலி நிலம், **மேற்கு:** P.செல்வி & ஞானராஜ் மற்றும் P.ராமசேது ஆகியோரால் வாங்கப்பட்ட காலி நிலம்.

ஆகவே இவ்வறிவிப்பு நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேற்கூறியபடி உங்கள் கடன்களை நீங்கள் முழுமையாகத் திருப்பியளிக்க நிறுவனம் கேட்டுக் கொள்கிறது. நிறுவனத்துக்கு நீங்கள் செலுத்த வேண்டிய உங்கள் கடன் நிலுவை என்பது ஒப்பந்த விதிப்படியான மேற்கூறிய தொகை மற்றும் இடைநிலுவை செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள் உட்பட. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரர் இதன் மூலம் அழைக்கப்படுகிறார். மேற்படி சட்டத்தின் பிரிவு 13(13)-க்கு ஒத்துமுறைக்குத் தவறினால் அது அச்சட்டத்தின் பிரிவு 29-இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வறிவிப்பில் உள்ள மேற்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தை நிறுவனத்தின் எழுத்துபூர்வ ஒப்புதல் இன்றி நீங்கள் விற்பனை, குத்தகை அல்லது இதர வழிகளில் பெயர் மாற்றம் செய்யக்கூடாது.

நாள்: 10.06.2026, இடம்: புதுக்கோட்டை. ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிட்.

பாரத ஸ்டேட் வங்கி
பாளையங்கோட்டை கிளை

தங்க நகை ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிட்ட கடனாளிகளுக்கு அவர்கள் பாரத ஸ்டேட் வங்கி, பாளையங்கோட்டை கிளையிலிருந்து பெற்ற தங்க நகைகள் மீதான கடன் பாக்கியை திருப்பி செலுத்த வலியுறுத்தி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக்கடனாளிகள் கடனைத்திருப்பிச் செலுத்த தவறியதால் நாங்கள் பிணையை **தங்க நகைகளை 19-06-2026 (வெள்ளி) அன்று மாலை 3.30 மணி**யளவில் பாரத ஸ்டேட் வங்கி, பாளையங்கோட்டை கிளையில் வைத்து ஏலம் விடும் கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளோம். இந்த ஏலத்தில் கடனாகச் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை போக, ஏதேனும் தொகை உபரியாக இருந்தால் அத்தொகை குறிப்பிட்ட கடனாளிக்கு திருப்பி அளிக்கப்படும். ஏலத்திற்குப்பிறகும் கடனாளி செலுத்த வேண்டிய கடன் தொகை மேலும் பாக்கி இருந்தால் இந்தப்பாக்கித்தொகை தகுந்த சட்ட நடவடிக்கைகள் மூலம் கடனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும். எவ்வித முன்னறிவிப்பும் இன்றி கீழே குறிப்பிட்ட எந்த கடன் கணக்கையும் ஏலத்தில் இருந்து நீக்கும் அதிகாரம் மற்றும் ஏலத்தேதியை மாற்றும் உரிமை பாரத ஸ்டேட் வங்கிக்கு உண்டு.

வ. எண்	பெயர் மற்றும் முகவரி	கடன் எண் & கடன் தேதி	மொத்த எடை	கடன் தொகை
1	திரு.சுகுமார் பரமசுந்தரம் நாடார், எண்.5/435,பதிய எண்.38C/435,கென்னடி தெரு, M.K.Pநகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002	42219283705 30/08/2023	16.50	ரூ.50,000/-
2	திரு.சுகுமார் பரமசுந்தரம் நாடார், எண்.5/435,பதிய எண்.38C/435,கென்னடி தெரு, M.K.Pநகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002	42546533898 22/12/2023	10.20	ரூ.33,000/-
3	திரு.மகேந்திரன், 9/313/9-295, கீழ தெரு, ஏழாயிரம் பண்ணை, சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்	42297221836 26/09/2023	20.80	ரூ.68,000/-
4	திருமதி.விச்சம்மாள், 4/1001, செட்டியார் தெரு, இராஜகோபாலபேரி, திருநெல்வேலி-627861	42453586256 20/11/2023	84.50	ரூ.3,00,000/-

தேதி : 11-06-2026
இடம் : பாளையங்கோட்டை
முதன்மை மேலாளர்,
பாரத ஸ்டேட் வங்கி, பாளையங்கோட்டை.

பேங்க் ஆஃப் பரோடா, கிளை - தேங்காப்பட்டணம் கிளை
16/39 A K S டவர்ஸ், பஸ் ஸ்டாண்ட் அருகில், பீச் ரோடு, தேங்காப்பட்டணம், கன்னியாகுமரி -629173
தொலைபேசி எண் 04651-204070,
மின்னஞ்சல்:vythep@bankofbaroda.co.in
மின்னணு ஏல அறிவிப்பு

பின்னிணைப்பு-E [நாளிதழ் வெளியீட்டுக்கான சுருக்கப்பட்ட விற்பனை அறிவிப்பு] அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு இணைப்பு-IV-A [பார்க்க விதி 6(2) & 8(6)]

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம்' 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 6(2) & 8(6) க்கான விதியின் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு(கள்)-இல் உள்ள நிலுவைகளை திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம்/ அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த பேங்க் ஆஃப் பரோடாவின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)/ கடனீட்டுச் சொத்துகள்/ நிலுவைத்தொகை/ குறைந்தபட்சக் கேட்பு விலை/ மின் ஏல நாள் & நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல உயர்வுத்தொகை ஆகிய விபரங்கள் பின்வருமாறு.

வ / லாட் எண்.	கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	அசையாச் சொத்தின் கருக்கமான விபரம், அறியப்பட்ட வில்லங்கங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றுடன் (அடமானம் வைத்தவர்____)	மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் / குறைந்தபட்ச விலை முன்வைப்புத்தொகை மற்றும் ஏல உயர்வுத்தொகை	சொத்து ஆய்வு தேதி & நேரம் / சுவாதீன நிலை (ஆக்கபூர்வம் / இயற்கை சுவாதீனம்)
1.	திரு.சுரேஷ் P, S/o. பாப்பியன்ஸ் 24-52, அன்பியம் 2, முள்ளூர்துறை கன்னியாகுமரி மாவட்டம் (கடன்தாரர்) 2. திருமதி.ஷீஜா A D/O. அருள்தாஸ் 24-282 அன்பியம் 5, முள்ளூர்துறை -629173 (இணை கடன்தாரர்)	03.06.2024 அன்றுள்ளபடி ரூ. 27,93,625.86 + அதற்கான வட்டி மற்றும் இதர கட்டணங்கள் சொத்து விவரம் : சொத்தும் அதன் அனைத்து முக்கியபகுதிகளும். கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தாலுகா மற்றும் முஞ்சிறை SRO, பைங்குளம் கிராமப் பஞ்சாயத்து பழைய S.No.2310, R.S.No.484/10, பட்டா எண் 6868 இல் உள்ள 3 சென்ட் நிலம், கதவு எண் 22-94H கட்டிடத்துடன் உள்ளது. எல்லைகள் : கிழக்கு: சாலை மற்றும் ஏ.வி.எம். கால்வாய், மேற்கு: ஹுஸைன் சொத்து, தெற்கு: அலி அ.பெக்கர் & ஷர்ஃபு நிஷா சொத்து, வடக்கு: கல்லறை. திரு.சுரேஷ் P அவர்களின் பெயரில் உள்ள சொத்து .	29-06-2026 தேதி பிற்பகல் 02.00 மணி - மாலை 6.00 மணி குறைந்தபட்ச விலை: ரூ. 30,70,000/- முன்வைப்புத்தொகை - ரூ. 3,07,000/- ஏல உயர்வுத்தொகை - ரூ. 50,000/-	26-06-2026 பிற்பகல் 02.00 மணி - மாலை 4.00 மணி இயற்கை
2.	திரு.சுகுமார் மணி M S/o மணி 16-28A உயர வீடு, கிள்ளியூர், ஸ்ரீ அம்பாள் நகர், புதுக்கடை, கன்னியாகுமரி-629171 (கடன்தாரர்) திருமதி நித்யா P , W/o திரு.சுகுமார் மணி M, 16-28A உயர வீடு, கிள்ளியூர், ஸ்ரீ அம்பாள் நகர், புதுக்கடை, கன்னியாகுமரி-629171 (இணை-கடன்தாரர்)	09.01.2025 அன்றுள்ளபடி ரூ. 25,61,858.63 + அதற்கான வட்டி மற்றும் இதர கட்டணங்கள் சொத்து விவரம் : சொத்தும் அதன் அனைத்து முக்கியபகுதிகளும். 4.750 சென்ட் நிலம் மற்றும் கட்டிடம், OS எண் 2095, RS எண் 137/1A1A குளத்தூர் கிராமம் மற்றும் கட்டிடம் கதவு எண் 7/78C, புதுக்கடை பஞ்சாயத்து, விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம். எல்லைகள் : கிழக்கு:ரமேஷ் சொத்து, வடக்கு:சாலை, மேற்கு:அஜிதா சொத்து, தெற்கு:சுகுமார் மற்றும் நித்யா பாதை. திரு.சுகுமார் M மற்றும் திருமதி.நித்யா P பெயரில் உள்ளது.	29-06-2026 தேதி பிற்பகல் 02.00 மணி - மாலை 6.00 மணி குறைந்தபட்ச விலை: ரூ.40,75,000/- முன்வைப்புத்தொகை - ரூ.4,08,000/- ஏல உயர்வுத்தொகை - ரூ.50,000/-	26-06-2026 பிற்பகல் 02.00 மணி - மாலை 4.00 மணி இயற்கை

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.bankofbaroda.in/e-auction என்ற இணையதள இணைப்பையும், ஆன்லைன் ஏல போர்ட்டலான Baanknet.com ஐயும் பார்க்கவும்/வருகை தரவும். மேலும், ஆர்வமுள்ள ஏலதாரர்கள் அதிகாரபூர்வ அலுவலரை தொலைபேசி-04651-204070 மொபைல்:6384447091 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி: 11-06-2026
இடம